

# அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் இரா மேசுவரம்

**ந.க.எண்.1346/2021/அ3 நாள்.13.04.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இணை ஆணையர்/செயல் அலுவலரால் கீழே குறிப்பிட்டுள்ள இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான இராமேசுவரம் பகுதியில் உள்ள வேதவனக்கொல்லை என்னும் இடத்தினை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணிக்கு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இத்திருக்கோயில் அலுவலக கடிகார நேரப்படி 13.05.2022ம்தேதி மாலை 4.00 மணி வரை வரவேற்கப்பட்டு 13.05.2022 மாலை 4.30 மணியளவில் இணை ஆணையர்/ செயல் அலுவலரால் முன்னிலையாகியுள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்,

### ஒப்பந்தப்புள்ளி விபரம்

| வ,எண் | பணியின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை லட்சத்தில் ரூ, | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை ரூ. +GST | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக்காரர் தரம் | ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விபரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான இராமேசுவரம் பகுதியில் உள்ள வேதவனக்கொல்லை என்னும் இடத்தினை சுற்றி கம்பி வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் (ந.க. எண்.1346/2021/அ3 | 28.00 லட்சம் (ரூபாய் இருபத்து எட்டு இலட்சம் மட்டும்) | 26,500/- | 9000/- + 1080/– GST வரி | 6 மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற முதல்நிலை ஒப்பந்தக்காரர்கள் | முதல் அழைப்பு |

**பின் குறிப்பு :–**

1) ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்பவர்கள் 26.04.2022 முதல் 12.05.2022ம் தேதி வரை அலுவலக நாட்கள் அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி வரவுச்சீட்டுகளை பெற்றக்கொள்ளலாம் . Online மூலம் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்பவர்கள் மேலே குறிப்பிட்ட தொகையை ARULMIGU RAMANATHASWAMY TEMPLE, RAMESWARM என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாக எடுத்து ஒப்பந்தப்புள்ளி படிவங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்
2) ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான GST தொகையினை https://payment.gst.gov.in/payment/ என்ற இணையதளத்தில் தங்கள் GST எண்ணை உள்ளீடு செய்து படிவத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை Online மூலம் செலுத்தி அதற்கான சான்றை ஒப்பந்தப்புள்ளி படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்
3) ஒப்பந்தப்புள்ளி இனவாரியான விலையை பூர்த்தி செய்து ஒப்பந்தக்காரர் தகுதி நிர்ணயிக்கும் பதிவு சான்றிதழ் நடப்பு புதுப்பித்தல் சான்று, வருமானவரி, சரக்கு மற்றும் சேவைவரி (GST) சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களை உறையினை மூடி அரக்கு முத்திரையிட்டு, ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒப்பந்தக்காரர்கள் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்றவராக இருத்தல் வேண்டும். மேற்படி பதிவு சான்றிதழுடன், நடப்பிலும், பதிவினை புதுப்பித்த சான்றிதழுடன், வருமானவரி, நிரந்தரக் கணக்கு எண், மதிப்புக்கூடுதல் வரி எண் மற்றும் வருமானவரி மற்றும் G.S.T வரி செலுத்தப்பட்டதற்கான Clearance Certificate பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளியுடன் மேற்கண்ட சான்றிதழ் நகல்கள் இணைத்து ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்,

2) ஒப்பந்தப்புள்ளி படிவங்களுடன் மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத்தொகைக்கு எதிரே குறிப்பிட்ட தொகையினை முன்வைப்புத்தொகையாக இவ்வலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி, அதற்கான வரவுச்சீட்டினை பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும். மேற்படி முன்வைப்புத் தொகைக்காக எந்தவித முதலீட்டுப்பத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3) ஒப்பந்தப்புள்ளி படிவம் கிரைய தொகைக்குரிய G.S.T வரி தொகையினை Online portal மூலம் செலுத்தி அதற்கான வரவுச் சீட்டினையும் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்க வேண்டும்.

4) ஒப்பந்தப்புள்ளி படிவம் கிரையத்தொகை எந்தக் காரணத்தை கொண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது.

5) ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் உடனடியக மதிப்பீட்டு தொகையில்1% (ஒரு சதவீதம்) தொகையினை கூடுதல் பிணைத்தொகையாக இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

6) முன்னறிவிப்பின்றி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கவோ, மறுக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

7) ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையினை அடித்தல், திருத்தல் இல்லாமல் தெளிவாக எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட வேண்டும்.

8) மேற்படி பணிகளை அதனெதிரே குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செய்து முடிக்க வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் காலதாமத அபராதத்தொகை ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து வசூலிக்கப்படும். மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை முடிக்கத் தவறும்பட்சத்தில் மறுஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளைச் செய்ய நேரிட்டால் மறு ஒப்பந்தப்புள்ளி காரணமாக ஏற்படும் சகல இழப்புத்தொகைகளும் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

9) ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் வேலையினை துவக்கும் முன்னர் தனது சொந்தச் செலவில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுத்து அதன் பின் வேலையினைத் துவக்க வேண்டும்,

10) செலுத்தப்படும் பிணை தொகைகள் மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் பிணை தொகைகளுக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது,

**11)** ஒப்பந்தப்புள்ளி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் டெண்டர் ஷெட்யூலினை இத்துறை இணையதளப்பக்கதில் **https://hrce.tn.gov.in** துறைசேவைகள் என்ற குறிப்பில் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் **Tntenders–ல்** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணை ஆணையர்/செயல்அலுவலர்